நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 2 ஆம் அமர்வு!

இன்று தொடங்குகிறது!

புதுடெல்லி, மார்ச் 9 - நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வு இன்று மீண்டும் கூடுகிறது. மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா வுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக திரிணாமூல் காங்கிரஸ் எம்.பி.க்கள் வாக்களிப்பாளர்கள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் அமர்வின் போது அமளியில் ஈடுபட்டதாகக் கூறி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 8 பேரை சபாநாயகர் ஓம் பிர்லா இடைநீக்கம் செய்வதாக அறிவித்தார்.

மேலும், மக்களவையில் பிரதமர் மோடியை முற்றுகையிட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் திட்டமிட்டிருந்ததாகவும் அவர் குற்றம்சாட்டினார். இதனால் கடும் அதிருப்தியடைந்த எதிர்க்கட்சிகள், ஓம் பிர்லா பாரபட்சமாக செயல்படுவதாக குற்றம்சாட்டியதுடன், அவரை...

இதனிடையே, வளைகுடா போர், எண்ணெய் தட்டுப்பாடு, ரூபாய் மதிப்பு வீழ்ச்சி உள்ளிட்ட நாடாளுமன்றத்தில் எழுப்ப வேண்டிய முக்கிய பிரச்சனைகள் குறித்து விவாதிப்பதற்காக இந்தியா கூட்டணிக் கட்சிகளின் நாடாளுமன்றக் குழுத் தலைவர்களின் கூட்டம் இன்று காலை 10 மணியளவில் நடைபெறுகிறது. நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறையில் இக்கூட்டம் நடைபெறுகிறது.

தூத்துக்குடியில் திட்டப்பணிகளைத் திறந்து வைத்து

3,958 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச்.9– துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் 177.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 4 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகத்தை புனரமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி, 3,958 பயனாளிகளுக்கு 110.66 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன் தினம் (7.3.2026) தூத்துக்குடி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 177.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 4 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகத்தை புனரமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி, 3,958 பயனாளிகளுக்கு 110.66 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இவ்விழாவில் துணை முதலமைச்சர் அவர்கள் தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்தில் 136.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள உயர்சிறப்பு மருத்துவமனை கட்டடம், திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் 38.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மகப்பேறு, குழந்தைகள் நலப்பிரிவு மற்றும் வியத்து அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம், எட்டயபுரம் மகாகவி பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளியில் 1.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 6 வகுப்பறை கட்டடம், படர்ந்த புளி அரசு உயர்நிலைப்பள்ளியில் 1.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 6 வகுப்பறை கட்டடம் என 177.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 4 திட்டப்பணிகளை திறந்து வைத்தார்.

தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் தூத்துக்குடி மாவட்ட விளையாட்டு வளாகத்தை 4.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 1,755 பயனாளிகளுக்கு 40.09 கோடி ரூபாய் மதிப்பிலான வீட்டுமனைப்பட்டா/ வரன்முறைப் பட்டா (கணினி இ பட்டா) க்களையும்,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 1800 பயனாளிகளுக்கு 63.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளையும், மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் சார்பில் 20 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 3.06 கோடி ரூபாய்க்கான வங்கிக் கடன் இணைப்புகளையும்,

மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS), கலைஞர் கைவினைத் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 5 பயனாளிகளுக்கு 54.09 லட்சம் ரூபாய் மானிய நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

தொடர்ந்து மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் என 51 மாற்றுத் திறனாளிகளுக்கு 53.58 லட்சம் ரூபாய் மதிப்பிலான உதவி உபகரணங்களையும்,

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் 9 பயனாளிகளுக்கு கடல்சார் கல்வி உதவித் தொகை, குளிர்காப்பிடப்பட்ட நான்கு சக்கர வாகனத்திற்காக மானியத்தொகை என 53.00 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும்,

தாட்கோ திட்டத்தின் சார்பில் நன்னிலம் மகளிர் நில உடைமை திட்டத்தின் கீழ் 5 தொழில் முனைவோருக்கு 51.00 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் தூத்துக்குடி மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் சார்பில் 77 பயனாளிகளுக்கு 15.40 லட்சம் ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளையும், 39 பயனாளிகளுக்கு 27.49 லட்சம் ரூபாய் மதிப்பிலான இலவச வீட்டு மனைப்பட்டாக்களையும் வழங்கினார்.

மேலும் கூட்டுறவுத் துறையின் சார்பில் 39 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு 39.00 லட்சம் ரூபாய்க்கான வங்கிகடன் இணைப்புகளையும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் 6 பயனாளிகளுக்கு 3.52 லட்சம் ரூபாய் மதிப்பிலான வேளாண் இடுபொருட்களையும்,

சமூக நலத்துறையின் சார்பில் 10 பெண்களுக்கு முதலமைச்சரின் இரண்டு பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2.50 லட்சம் ரூபாய்க்கான நல உதவிகளையும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்புத்துறையின் அன்புக் கரங்கள் திட்டத்தின் கீழ் 106 பயனாளிகளுக்கு 2.12 லட்சம் ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளையும்,

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு 26,760 ரூபாய் மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் முதலமைச்சர் விளையாட்டு வீரர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 15 விளையாட்டு வீரர்களுக்கு காப்பீட்டு அட்டைகளையும், பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கான ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் வீராங்கனை முத்துமீனாவிற்கு 12.00 லட்சம் ரூபாய் நிதியுதவிக்கான காசோலையையும்,

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் அனைவருக்கும் வீடு வசதி திட்டத்தின் கீழ் 16 பயனாளிகளுக்கு தலா 8,50,000 ரூபாய் வீதம் மொத்தம் 1.36 கோடி ரூபாய்க்கான மானியத்தையும் என கூடுதல் மொத்தமாக 3,958 பயனாளிகளுக்கு 110.66 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி.மார்க்கண்டேயன், மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், மாநகராட்சி ஆணையர் திருமதி சி.ப்ரியங்கா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி ஆர்.ஐஸ் வர்யா, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன், உதவி ஆட்சியர் (பயிற்சி) தி.புவனேஷ் ராம், உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

உலக மகளிர் நாள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, மார்ச் 9 - 'உலக மகளிர் நாளை'யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் 'உலக மகளிர் நாளை' முன்னிட்டு சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துப் பதிவு வருமாறு:

வெல்லும் தமிழ்ப் பெண்களே...

நீங்கள் வெல்வதற்கு உலகும் உங்களுக்குத் துணை நிற்க திராவிட மாடலும் இருக்கிறது!

தடைகளைத் தகர்த்தெறிந்து தொடர்ந்து முன்னேறுங்கள். உங்களது பயணத்தின் ஒவ்வொரு அடியிலும் உடன்நிற்க நமது திராவிட மாடல் அரசு இருக்கிறது... அனைவருக்கும் உங்கள் ஸ்டாலினின் உலக மகளிர் நாள் நல்வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

வா தலைவா வா...!

தடைகளை
விடைகளாக்கும்
தலைவா..

முட்டுக்
கட்டைகளை
வெற்றிக்
கோப்பைகளாக்கும்
முதல்வா..

போர்க்களங்களை
புகழ்க்
கிரீடங்களாக்கும்
புதல்வா..

திறமையை
துடுப்பாக்கி

திசை
எட்டையும்
கிழக்காக்கும்

திராவிட
மாடலின்
இறைவா...

'பூமி
தன்னைத் தானே
சுற்றிக் கொண்டு

சூரியனை
சுற்றி வருகிறது'

என்னும்

அறிவியல்
தத்துவத்தை

அறிவாலய
தட்பமாக்கிய
ஞானக்காரரே..

சக்கர
வியூகங்களில்
சிக்க

நான்
அபிமன்யூ
அல்ல

அந்த
சக்கரத்தையே
சுட்டு விரலில்

சுழலவிடும்

அறிவாலயத்து
கிருஷ்ண பரமாத்மா
என்பதை

இந்நாட்டு
அரசியலுக்கு

தெளியவைத்த
தென்னாட்டு
நாயகரே...

எதிரிகள்
ஏவும்
கணைகளை
எல்லாம்

கையில்
பிடித்து
காது குடையும்

நற்றமிழ்
கலைஞரின்
நகல் வடிவே...

அச்சமெனும்
சொல் அறியா

ஆரூரின்
தேரழகே..

மிரட்டல்
உருட்டலுக்கு

விழி சிமிட்டா
மிசா வீரமே..

ஓயாத
உழைப்பே

ஒப்பில்லா
வியப்பே..

"முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலின்
எனும் நான்"...

இந்த மந்திர
மொழியை
மறுமுறை கேட்க

உலகமே
ஆர்வத்தில்..

அதற்கான
ஒரு விரல்
புரட்சிக்கு

ஊரெல்லாம்
ஆயத்தத்தில்..

ஆம்..

உதயசூரியனின்

ஒளியும்
ஒலியில் மகிழ

ஓட்டுப்பதிவு
எந்திரங்களும்
ஆர்வத்தில்...

என்ன நாஞ் சொல்றது

மருது அழகுராஜ்
கழகச் செய்தித்
தொடர்புக் குழு
துணைத் தலைவர்

படப்பை ஆ.மனோகரன் தலைமை! முதல்வர் பிறந்த நாள் விழா!

படப்பையில் பரிசுகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம்!

டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

காஞ்சிபுரம், மார்ச். 9- குன்றத்தூர் தெற்கு ஒன்றியதி.மு.க.மற்றும்படப்பை ஊராட்சி தி.மு.க. சார்பில் மார்ச்-1 கழகத் தலைவர் 73வது பிறந்தநாள்விழாமற்றும் பொங்கல்விழா போட்டிகளின் வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கி மாபெரும்பொதுக்கூட்டம் நாளை (10.3.2026, செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணியளவில் படப்பை பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு குன்றத்தூர்தெற்கு ஒன்றிய கழகச்செயலாளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

குன்றத்தூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், படப்பை ஊராட்சி மன்றத் தலைவர் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர்எஸ்.கர்ணன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

வ.நந்தகோபால், சி.பார்த்தசாரதி, மூ.ராஜேந்திரன், குமுதா சுமன், டி.லோகநாதன், த.ஏழுமலை, என்.வாசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழகப் பொருளாளர் - திருப்பெரும்புதூர்நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, குறு சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறைஅமைச்சர், காஞ்சி(வ) மாவட்டக் கழகச் செயலாளர்தா.மோ.அன்பரசன்ஆகியோர்சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம். திருமுடிவாக்கம் இ.மணி, ஏ.வந்தேமாதரம், உமாமகேஸ்வரிவந்தேமாதரம், வடக்குப் பட்டு ச.பேரரசன், திருமதி ஸ்ரீலேகா, சங்கீதா வேலு, மலர் விழி தமிழ் அமுதன், வி.எஸ்.கோதண்டராமன், என்.எஸ். இளங்கோ, ரா.தீபக் ராஜ், லோ.சுதாகர், அ.ஜமீர், நா. ஜெகதீசன், ஜெ. கோகுல்நாதன், ஜெ.குணசேகரன், ரேவதி சதீஷ், ரா.பிரதீப், சே.பாலகிருஷ்ணன், மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா நடராஜன், ஜி.இருசப்பன், ஏ.இ.பஞ்சாட்சரம், எம்.அசோக்குமார், ப.வேல்முருகன், ராஜலட்சுமி, வீ.சுதாகர், சாவித்திரி சந்திரன், த.தமிழ்அமுதன், வள்ளி சுந்தர், ஸ்ரீவித்யா ரஞ்சித் குமார், வசந்தி சாம்பசிவம், அ.ராஜன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.பா.ஆடலரசு, படப்பை ஊராட்சி மன்ற துணை தலைவர்ஏ.டி.எம்.வினோத் நன்றி கூறுகின்றனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட பிரதிநிதி மாதவரம் தெற்கு பகுதி புத்தகரம் சிவில் எம்.செல்வம் இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார் .உடன் பகுதி செயலாளர் ஜி .துக்காராம், மண்டல குழு தலைவர் எஸ். நந்தகோபால், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதன், ஒன்றிய பொறுப்பாளர் அற்புதராஜ், ஐ சி எப் முரளி, மாமன்ற உறுப்பினர் புத்தகரம் இ. ஏழுமலை, வட்ட செயலாளர் எம். சரவணன், துரை ஸ்ரீராம், தேரமணன்,ஆர் சுந்தர்ராஜன், ஆட்டோ உமாபதி,எஸ். என் .கோதண்டன் ,ஆனந்தன், கௌதம் ,பாலாஜி, டைலர் சீனு ,வேலுச்சாமி, சாரதி நகர் முருகன் ,ஹேமாவதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கோ.சத்தியமூர்த்தி – பானு வரவேற்கின்றனர்! சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

ஏ.கோதண்டம் - கோ.சுபத்திரையம்மாள் இல்ல மணவிழா வரவேற்பு!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் – டி.ஆர்.பாலு எம்.பி. – ஆர்.எஸ்.பாரதி வாழ்த்துரை!

காஞ்சிபுரம், மார்ச் 9 - திருப்பெரும்புதூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.கோதண்டம் - சுபத்திரையம்மாள் ஆகியோரின் மகன் வழி பேத்தியும் குன்றத்தூர் நகரக் கழகச் செயலாளர் நகர்மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி - பானு சத்தியமூர்த்தி ஆகியோரின் புதல்வியுமான கே.எஸ்.சமித்ராவுக்கும், பழந்தண்டலம் எம். ஜானகிராமன் - ஜெ.அலமேலு ஆகியோரின் புதல்வர் ஜெ.பிரதீப்க்கும் மணவிழா வரவேற்பு இன்று (9.3.2026 - திங்கட்கிழமை) மாலை 6:30 மணி அளவில் கரசங்கால் ஹர்ஷா கார்டனில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், டி.ஆர்.பாலு எம்.பி., ஆர்.எஸ். பாரதி, கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ., மீ.அ. வைதியலிங்கம், படப்பை மனோகரன் ஆகிய பங்கேற்று மண மக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் க.செல்வம், எம்.பி., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ. வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., ஆர்.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., த.துரைசாமி, துணை மேயர் கோ.காமராஜ், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஆ.தமிழ்மாறன், சரஸ்வதி மனோகரன், எஸ்.டி.கருணாநிதி, நா.கோபால், ஏ.வந்தேமாதரம், திருமுடிவாக்கம் ஏ.மணி, பட்டூர் எஸ்.ஜபருல்லா, ஆர்.சதீஷ்குமார், எஸ்.சாந்தி, சதீஷ்குமார், உமா மகேஸ்வரி, வந்தே மாதரம், டி.கே. குமாரசாமி, டி.எஸ்.கலைச்செல்வன், எம்.சங்கர், கே.கே.ராஜமாணிக்கம், டி.திருநாவுக் கரசு, மாலதி போஸ்கோ, எம்.ஆர்.சீனிவாசன், மு.செல்வமணி, வி.அரி, சுமதி முருகன், தா.மோ.எழிலரசன், சி.என்.ராமச்சந்திரன் உள்ளிட்ட கழகத்தினர் பலர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

குன்றத்தூர் கழகச் செயலாளர் - நகர்மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி - பானு சத்தியமூர்த்தி ஆகியோர் மணவிழா வரவேற்புக்கு வருகை தருவோரை வரவேற்கின்றனர்.